Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935



# கர்நாடக மாநிலம் உத்தர கன்னடப் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பிரதமர் இரங்கல்



சென்னை, 23 ஜனவரி 2025: கர்நாடக மாநிலம் உத்தர கன்னடாவில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து கருணைத் தொகையாக வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"கர்நாடக மாநிலம் உத்தர கன்னடா மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளது ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் நிர்வாகம் உதவி வருகிறது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்படும்: பிரதமர் நரேந்திர மோடி

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: தி.மு.க., சீமான் கட்சி உட்பட 46 வேட்பாளர்கள் போட்டி





சென்னை, 23 ஜனவரி 2025: ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்த பெங்களூருவைச் சேர்ந்த சுயேட்சை வேட்பாளர் பத்மாவதியின் வேட்புமனு நேற்று நள்ளிரவில் தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து, ஈரோடு தேர்தல் களத்தில் தி.மு.க., நா.த.க. உட்பட 46 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10ந் தேதி தொடங்கி 17ந்தேதி வரை நடைபெற்றது. 58 வேட்பாளர்கள் மொத்தம் 65 வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். இதில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 4 மனுக்களும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி 3 மனுக்களும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 18ம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடந்தது. இதில் தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட மொத்தம் 55 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் 3 வேட்பாளர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. நேற்று வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும்.

இதில் 7 சுயேட்சை வேட்பாளர்கள் மற்றும் ஒரு பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சியின் மாற்று வேட்பாளர் என மொத்தம் எட்டு வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுக்களை திரும்ப பெற்றனர். இதன்படி, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 47 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாக ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடந்தது. இதன்படி அங்கீகரிக்கப்பட்ட கட்சியான தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு உதயசூரியன் சின்னம் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து, அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமிக்கு மைக் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட மற்றும் சுயேட்சை வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடந்தது.

அப்போது கர்நாடக மாநிலம் பெங்களூரு, கே.ஆர்.புரம் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த வி.பத்மாவதி என்ற சுயேட்சை வேட்பாளின் மனு ஏற்கப்பட்டதற்கு, சுயேட்சை வேட்பாளர்கள் நூர் முகமது, அக்னி ஆழ்வார், பத்மராஜன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் ஆணைய விதிமுறைகளின்படி, மக்களவை மற்றும் மாநிலங்களவைக்கு எந்த மாநிலத்தில் இருந்தும் வேட்பாளராக போட்டியிடலாம். ஆனால், சட்டசபை தொகுதிக்கு அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் மட்டுமே போட்டியிட முடியும் என போராட்டத்தில் ஈடுபட்ட சுயேட்சை வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகோபால் சுன்கராவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஈரோடு மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்த அவர், ஆலோசனை மேற்கொண்டார். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருடன் அவர் ஆலோசனை மேற்கொண்ட நிலையில் நள்ளிரவு வரை வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

தேர்தல் ஆணைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின் பெங்களூருவைச் சேர்ந்த சுயேட்சை வேட்பாளர் பத்மாவதியின் வேட்புமனு தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 46 ஆக குறைந்துள்ளது.

# பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கத்தின் 10-வது ஆண்டை முன்னிட்டு பிரதமர் மகிழ்ச்சி



**பெண் குழந்தைகளை காப்போம்!!!**

**பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்!!!**

சென்னை, 23 ஜனவரி 2025: பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு 22.01.2025 அன்று பிரதமர் திரு நரேந்திர மோடி, பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாக மாறியுள்ளது என்றும், அனைத்துத் தரப்பு மக்களின் பங்களிப்பையும் ஈர்த்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம் பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார். வரலாற்று ரீதியில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள திரு நரேந்திர மோடி, இந்த இயக்கத்தை அடிமட்ட அளவில் துடிப்பானதாக மாற்றிய அனைத்து தரப்பினரையும் பாராட்டியுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"இன்று நாம் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கத்தின் 10 ஆம் ஆண்டில் இருக்கிறோம். கடந்த பத்து ஆண்டுகளில், இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்ற, மக்கள் பங்கேற்பு முயற்சியாக மாறியுள்ளதுடன் அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்பையும் பெற்றுள்ளது."

"பாலினப் பாகுபாடுகளை நீக்குவதில் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம் முக்கிய கருவியாக உள்ளது. அதே நேரத்தில் பெண் குழந்தைக்கு கல்வியை வழங்கி அவர்கள் தங்களது கனவுகளை அடைவதற்கான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான சூழலை இது உருவாக்கியுள்ளது."

"மக்களின் முயற்சிகளுக்கும் பல்வேறு சமூக சேவை அமைப்புகளின் அர்ப்பணிப்பு முயற்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்துள்ளது. வரலாற்று ரீதியாக குறைந்த குழந்தைப் பாலின விகிதங்களைக் கொண்ட மாவட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளன. விழிப்புணர்வு பிரச்சாரங்கள் பாலின சமத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து ஆழமான உணர்வைத் தூண்டியுள்ளன."

"இந்த இயக்கத்தை அடிமட்ட அளவில் துடிப்பானதாக மாற்றிய அனைத்து தரப்பினரையும் நான் பாராட்டுகிறேன். நமது மகள்களின் உரிமைகளை நாம் தொடர்ந்து காப்போம். அவர்களின் கல்வியை உறுதி செய்வோம். எந்தவித பாகுபாடும் இல்லாமல் அவர்கள் செழித்து வளரக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவோம். வரும் ஆண்டுகளில் இந்தியாவின் மகள்களுக்கு மேலும் சிறப்பான வளர்ச்சியையும், வாய்ப்புகளையும் கொண்டு வருவதை நாம் அனைவரும் இணைந்து உறுதி செய்ய முடியும்.

# அந்தமானில் வீர தீர தின கொண்டாட்டங்களில் மத்திய இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிகில் காட்சே பங்கேற்கிறார்



சென்னை, 23 ஜனவரி 2025: நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில், வீர தீர தினம் (பராக்ரம் திவாஸ்) கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மத்திய இளைஞர் நலன், விளையாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிகில் காட்சே, இன்று (2025 ஜனவரி 23) அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் உள்ள ஸ்ரீவிஜயபுரத்தில் (போர்ட் பிளேர்) 'ஜெய் ஹிந்த் பாதயாத்திரை' நிகழ்வில் பங்கேற்கிறார். நேதாஜியின் துணிச்சலான உணர்வுக்கு அஞ்சலி செலுத்தும் இந்த நிகழ்ச்சியில் 1500 மை பாரத் இளைஞர் தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர்.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை அடையாளப்படுத்தும் வகையில், சுமார் 5 கிலோமீட்டர் தூரம் இந்தப் பாதயாத்திரை நடைபெறும். இதில் நேதாஜியின் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெறும்.

இளைஞர்களுக்கான போட்டிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், நேதாஜி தொடர்பான புகைப்பட கண்காட்சி அரங்குகள் போன்றவற்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmil.com RNI No. : TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தஞ்சை அருமலைக்கோட்டை தலித் முதியவர் வன்கொலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சென்னை, 23 ஜனவரி 2025: தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், அருமலைக்கோட்டை கிராமத்தில் பட்டியல் சமூகத்தைச் சார்ந்த முதியவர் அருணாச்சலம் சாதி ஆதிக்க வெறிச் செயலுக்கு ஆளாகி படுகொலை செய்யப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

பட்டியல் சமூக முதியவர் 62 வயதான அருணாச்சலம் அதே ஊரைச் சேர்ந்த விவேக் என்கிற இளைஞனால் சாராய பாட்டிலால் கழுத்திலும் உடலிலும் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார். ஊர் மக்களும், உறவினர்களும் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னணியில் குற்றவாளி நள்ளிரவே கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய வன்செயல்கள் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறுவது கவலையளிக்கிறது. அரசு இயந்திரமும், காவல்துறையும் விரைந்து நடவடிக்கை எடுப்பதோடு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் தீண்டாமை கொடுமைகளும், வன்செயல்களும் அதிகமாக நடந்தேறுகிற பகுதிகளை அடையாளம் கண்டு பட்டியல் சாதி மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை உறுதி செய்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசு வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவின் கீழ் தீருதவியை தாமதமின்றி வழங்கிட வேண்டும். அரசு வேலையை அருணாச்சலம் மகன் மணிகண்டனுக்கு விரைந்து வழங்கிட வேண்டும். இதுபோன்ற வன்செயல்களுக்கும், சட்ட ஒழுங்கு பிரச்சனைகளுக்கும் காரணமாக உள்ள டாஸ்மாக் கடையை உடனடியாக மூட வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட அமைப்புகளின் போராட்டத்தில் வருவாய் கோட்டாட்சியரும், காவல்துறை துணை கண்காணிப்பாளரும் அளித்த உறுதிமொழிகளை விரைந்து நிறைவேற்றிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

# அரசு கவின் கலைக் கல்லூரியில் ரூ.21 கோடியில் 3 புதிய கட்டடங்கள்: அமைச்சர் சாமிநாதன் தகவல்



சென்னை, 23 ஜனவரி 2025: தமிழ்நாடு அரசு கவின் கலைக் கல்லூரியில் 3 புதிய கட்டடங்கள் ரூ.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது என்று அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

சென்னை பெரியமேடு, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் உள்ள தமிழ்நாடு அரசு கவின் கலைக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப்பணிகளை செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது :

தமிழ்நாடு அரசு கவின் கலைக் கல்லூரி, 6 பிரிவுகளைக் கொண்டு ஏறத்தாழ 175 ஆண்டு காலம் நிறைவடைந்து 176 வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த சூழ்நிலையில், ஏற்கனவே இருந்த பழைய கட்டடங்களை எல்லாம் புதுப்பிக்கின்ற வகையில் முதலமைச்சரின் உத்தரவின் அடிப்படையில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இது மட்டுமல்லாமல் 3 புதிய கட்டடங்கள் ஏறத்தாழ சுமார் 53,300 சதுர அடி பரப்பளவில் ரூ.21 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கிறது. இதன் பிறகு விரைவில் பணிகள் தொடங்கி நடைபெற இருக்கிறது. இக்கல்லூரியில் 481 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். தென்னிந்தியா விலேயே சிறப்பான கல்லூரியாக இன்று மக்களால் பாராட்டப்பட்டு அரசு கவின் கலைக் கல்லூரி சிறப்பாக நடைபெற்று வருகிறது. பொதுப்பணித்துறை மேற்கண்ட பணிகளை பிரதான சின்னங்களை எல்லாம் பாதுகாக்கின்ற வகையில் மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணிகள் முடிவடையும்போது அரசு கவின் கலைக் கல்லூரி புதுப்பொலிவு பெறும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2 பழையக் கட்டடங்களின் புனரமைப்பு பணிகளும் மார்ச் மாதம் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கட்டடங்களுக்கு ஒப்பந்தப் புள்ளிகோரி அப்பணிகள் பிப்ரவரி மாதம் இறுதியில் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

வள்ளுவர் கோட்டம், மார்ச் மாதம் இறுதிக்குள் பணிகள் முடிக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ராஜாஜி ஹால் மே மாதம் இறுதியில் நடைபெறும் என்று ஒரு கேள்விக்கு பதிலளித்தார்.

ஆய்வின்போது, சுற்றுலா துறை அரசு முதன்மைச்செயலாளர் பி. சந்திரமோகன், பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கனிம வளக் கொள்ளைக்கு எதிராக போராடிய ஜெபகர் அலி படுகொலை: ஓபிஎஸ் கண்டனம்



சென்னை, 23 ஜனவரி 2025: கனிம வளக் கொள்ளைக்கு எதிராக போராடிய ஜெபகர் அலி படுகொலை செய்யப்பட்டதற்கு ஓ. பன்னீர்செல்வம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சட்ட விரோதமாக மணல் அள்ளுவது, டாஸ்மாக் கடைகள் மூலம் வருமானத்தைப் பெருக்குவது, மதுக் கூடங்களுக்கு அனுமதி வழங்குவது, போதைப் பொருட்களின் புகலிடமாக தமிழ்நாட்டை மாற்றுவது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள்தான் தமிழ்நாட்டில் கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற கொடூரச் செயல்களை தனி நபர்கள் தட்டிக் கேட்டால் அவர்களை வெட்டுவது, கொலை செய்வது என்பதும், இதுபோன்ற மாபாதகச் செயல்களை எதிர்த்து அரசியல் கட்சிகள் அறப் போராட்டங்களை மேற்கொண்டால் அவற்றை அதிகார பலம் மற்றும் படை பலத்தைக் கொண்டு அடக்குவது என்பதும் வாடிக்கையாக இருந்து வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், வெங்கலூரரைச் சேர்ந்தவரும், கனிம வளக் கொள்கைக்கு எதிராக போராடி வந்த சமூக ஆர்வலரும், அண்ணா தி.மு.க. முன்னாள் நிர்வாகியுமான ஜெகபர் அலி பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது லாரி மோதி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தியறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன். அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கொலைவெறித் தாக்குதல் கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கெனவே, மணல் கொள்ளை தொடர்பாக மத்திய அமலாக்கத் துறை நடவடிக்கை எடுத்தபோது, அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்ற அரசு தி.மு.க. அரசு. இதேபோன்று, ஜெபகர் அலியின் உயிரிழப்பு முதலில் விபத்து வழக்காக காட்டப்பட்டு பின்னர் பல தரப்பிலிருந்து வந்த கடும் எதிர்ப்பு காரணமாக அது கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. அதாவது, மணல் கொள்ளைக்கு ஆதரவாக தி.மு.க. அரசு செயல்படுகிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கொலைவெறித் தாக்குதல்

இந்த நிலையில், தி.மு.க. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல் துறை இதுகுறித்து விசாரணை நடத்தினால், உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் நினைக்கிறார்கள். தமிழ்நாட்டில் கனிம வளக் கொள்கைக்கு எதிராக போராடுபவர்கள், குரல் கொடுப்பவர்கள்மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்படுவது என்பது வாடிக்கையாகிவிட்டது.

இதற்குக் காரணம், கனிம வளக் கொள்ளையர்கள்மீது மென்மையான போக்கினை தி.மு.க. அரசு கடைபிடிப்பதுதான். புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்திற்கு கனிம வளக்கொள்ளை தொடர்பாக ஜெபகர் அலியால் பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டும், அதன்மீது தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது, மணல் கொள்ளை மூலம் தி.மு.க.விற்கு மிகப் பெரிய அளவில் கிடைக்க வேண்டியது கிடைக்கிறதோ என்ற சந்தேகம் மக்களிடையே நிலவுகிறது.

சட்டம்-ஒழுங்கை தன்வசம் வைத்திருக்கும் முதலமைச்சர், இனிமேலாவது தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு, கனிம வளக் கொள்ளையை முற்றிலும் ஒழித்துக் கட்டவும், இந்த கொலைக்கு காரணமான உண்மைக் குற்றவாளிகளை கண்டறிந்து, அவர்களை விரைந்து சட்டத்தின் முன் நிறுத்தி அதற்குரிய தண்டனையைப் பெற்றுத் தரவும், கனிம வளக் கொள்ளையைத் தடுக்கப் போராடி உயிரிழந்த ஜெபகர் அலியின் குடும்பத்திற்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# வன்னிவேடு அரசு ஆண்கள் பள்ளியில் கலெக்டர் சந்திரகலா நேரில் ஆய்வு



சென்னை, 23 ஜனவரி 2025: ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திரகலா, வாலாஜா வன்னிவேடு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் சந்திரகலா இன்று வாலாஜாபேட்டை வன்னிவேடு, அரசு பள்ளியில் பழதடைந்துள்ள பழைய கட்டடத்தை சீரமைத்து நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.70.65 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, 10 ம் வகுப்பு மாணவர்கள் கற்றல், கற்பித்தல் திறன்களை வகுப்பு வாரியாக ஆய்வு மேற்கொண்டார். கற்றல் திறன் குறைந்த மாணவர்களை ஊக்கவிக்க சிறப்பு வகுப்புகள் எடுக்கவும், மாணவர்கள் பள்ளி தொடர் வருகையை கண்காணித்திடவும், பள்ளி வகுப்பறைகள், பள்ளி வளாகத்தை எப்போதும் தூய்மைப்படுத்திடவும், தேர்ச்சி சதவீதத்தை உயர்த்திடவும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.

பள்ளியில் கடந்த ஆண்டு தேர்ச்சி சதவீதம் மற்றும் தற்போது நடைபெற்று முடிந்த காலாண்டு, அரையாண்டு தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைவாக உள்ளது. அதனை அதிகரிக்க தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தேர்ச்சி சதவீதம் உயர்த்த அனைத்து ஆசிரியர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றிட வேண்டுமென அறிவுரைகள் வழங்கினார்.

இடிக்கப்பட வேண்டிய கழிப்பறைக் கட்டிடங்களை உடனடியாக இடிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் பள்ளிக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தருவதாக வழிவகைகள் வழங்கினார். பின்னர், எதிர்வரும் 10 மற்றும் 12 ம் வகுப்பு பொது தேர்வுக்காக முகப்புத்தாளுடன் கூடிய விடைத்தாள்கள் தைக்கும் பணியினை பார்வையிட்டார்.

இந்த ஆய்வினில் முதன்மை கல்விஅலுவலர் சரஸ்வதி, வட்டாட்சியர் அருள்செல்வம், நேர்முக உதவியாளர் தனஞ்செழியன், தலைமையாசிரியர் பவானி மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

# ரூ.1 கோடியே 24 லட்சம் செலவில் மணலூர்பேட்டையில் பேரூராட்சி அலுவலகம் கட்ட பூமி பூஜை: கலெக்டர் துவக்கி வைத்தார்

சென்னை, 23 ஜனவரி 2025: கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டையில் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடக் கட்டுமான பணிக்கான பூமி பூஜை கலெக்டர் எம்.எஸ்.பிரசாந்த், சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். இன்றைய தினம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை முதல்நிலை பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அதன்படி மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் ரூ.1 கோடியே 24 லட்சம் மதிப்பீட்டில் 294.14 ச.மீ. பரப்பளவில் மணலூர்பேட்டை பேரூராட்சி புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

இக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் போர்டிகோ, தலைவர் அறை, செயல் அலுவலர் அறை, பொறியாளர் அறை, கணினி அறை, பதிவறை எழுத்தர் அறை மற்றும் காத்திருப்பு அறை ஆகிய அறைகளும், முதல் தளத்தில் மன்ற கூட்டரங்கு, தலைவர் அறை மற்றும் காத்திருப்பு அறை ஆகிய அறைகளும் கட்டப்படவுள்ளன. கட்டுமானப் பணிகளை தரமாகவும் விரைந்து முடித்திடவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ச.மகேஸ்வரி, மணலூர்பேட்டை பேரூராட்சி மன்றத் தலைவர் ஜெ.ரேவதி ஜெயகணேஷ், துணைத்தலைவர் மா.தம்பிதுரை மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பேரூராட்சி துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# அண்ணாநகர் பகுதியில் உள்ள ஸ்பா & மசாஜ் சென்டரில் பாலியல் தொழில் நடத்திய பெண் கைது.

சென்னை, 23 ஜனவரி 2025: சென்னை பெருநகர காவல், கே-4 அண்ணாநகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படையினர் 21.01.2025 அன்று அண்ணாநகர் மேற்கு பகுதியில் உள்ள ஒரு ஸ்பா & மசாஜ் சென்டரை கண்காணித்தபோது, அங்கு பெண்களை வைத்து



பாலியல் தொழில் நடப்பது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட காவல் குழுவினர் மேற்படி ஸ்பா & மசாஜ் சென்டரில் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய மேற்படி ஸ்பா & மசாஜ் சென்டரின்

உரிமையாளர் பிரேமா, பெ/வ/30, க/பெ.விக்னேஷ், திருச்சினாங்குப்பம், திருவொற்றியூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், மேற்படி இடத்தில் பாலியல்

தொழிலில் ஈடுபடுத்த தங்க வைத்திருந்த 3 பெண்கள் மீட்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட எதிரி பிரேமா விசாரணைக்குப் பின்னர் 21.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார். மீட்கப்பட்ட 3 பெண்கள் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# மாதவரம் பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த நபர் கைது.

சென்னை, 23 ஜனவரி 2025: சென்னை பெருநகரில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள், வெளி மாநில மற்றும் ஒரு நம்பர் லாட்டரி சீட்டுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் நபர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப, அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், உதவி ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையில், தனிப்படை காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு இது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக எம்-1 மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் 21.01.2025 அன்று மாதவரம், 3வது மெயின்



ரோடு, பிரான்சிஸ் காலனியில் கண்காணித்து, வெளி மாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை துண்டு காகிதத்தில் எழுதி கொடுத்து,

சட்டவிரோதமாக லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து கொண்டிருந்த, அபுபக்கர், வ/56, த/பெ.இப்ராகிம், 3வது மெயின் ரோடு, பிரான்சிஸ் காலனி, மாதவரம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் மற்றும் துண்டு காகித சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மேற்படி அபுபக்கர் 21.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# குமரன் நகர் பகுதியில் டிபன் கடையின் உரிமையாளரை மிரட்டி, பணம் பறித்த நபர் கைது.

சென்னை, 23 ஜனவரி 2025: சென்னை, அசோக்நகர், நல்லாங்குப்பம் 58வது தெருவில் வசித்து வரும் பௌசர் அலி, வ/51, த/பெ.சுல்தான் அப்துல்காதர் என்பவர் மேட்டுபாளையம்,

கோவிந்தன் ரோடு, பெட்ரோல் பங்க் அருகே தள்ளுவண்டியில் டிபன் கடை நடத்தி வருகிறார். பௌசர் அலி 20.01.2025 அன்று இரவு, மேற்படி டிபன் கடையில் இருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபரான விஜய் என்பவர் டிபன் பார்சல் பெற்று கொண்டு பணம் தராமல் சென்றபோது, பௌசர் அலி அவரிடம் பணம் கேட்டதற்கு, அந்த நபர் பௌசர் அலியிடம் பணம் தர முடியாது எனக்கூறி தகாத வார்த்தைகளால் பேசி, அவரை மிரட்டியதுடன், கீழே கிடந்த கட்டையை எடுத்து டிபன் கடையை சேதப்படுத்தியதுடன், கல்லாவில் இருந்த பணம் ரூ.500/-ஐ எடுத்துக் கொண்டு, தப்பிச் சென்றார். இது குறித்து பௌசர் அலி, ஆர்-6 குமரன்நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-6 குமரன்நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட விஜய், வ/28, த/பெ.கண்ணையன், வி.ஓ.பிளாக், ஜாபர்கான்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட விஜய் குமரன்நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் இவர் மீது



3க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி விஜய் விசாரணைக்குப் பின்னர் 21.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



**கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட 5 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.80,000 மதிப்பீட்டிலான கைப்பேசிகளை மாவட்ட கலெக்டர் சிபிஆதித்யா செந்தில்குமார் வழங்கினார். இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 503 மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள கலெக்டர் அறிவுறுத்தினார். கூட்டத்தில் வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பாபு ஆகியோர் பங்கேற்றனர்.**

# அண்ணாநகர் பகுதியில் மூன்று சக்கர வாகனத்தில் பேட்டரிகளை திருடிய நபர் கைது ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள 2 பேட்டரிகள் பறிமுதல்.

சென்னை, 23 ஜனவரி 2025: சென்னை, அமைந்தகரை, பூந்தமல்லி ஹைரோடு, எண்.260 என்ற முகவரியில் வசித்து வரும் லட்சுமிபதி, வ/44, த/பெ.வரதரெட்டி என்பவர் அண்ணாநகர் பகுதியில் உள்ள எம்எல்ஏ அலுவலகத்தில் வேலை செய்து வருகிறார். மேற்படி அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மருந்து தெளிக்க பயன்படுத்தப்படும், 3 சக்கர பேட்டரி



வாகனத்திலிருந்து யாரோ 2 பேட்டரிகளை திருடியுள்ளதாக, மேற்படி லட்சுமிபதி கொடுத்த புகாரின்

பேரில் கே-4 அண்ணாநகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கே-4 அண்ணாநகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன்,

மேற்படி பேட்டரி திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட வினோத்குமார் (எ) ராகுல், வ/34, த/பெ.இளமுருகன், ஜோதியம்மாள் நகர், செனாய் நகர்,

சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள 2 பேட்டரிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட வினோத்குமார் (எ) ராகுல் 21.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற

உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# அமைந்தகரை பகுதியில் மாஞ்சா நூல் விற்பனை செய்த நபர் கைது. 1 மாஞ்சா நூல் ரோல் பறிமுதல்.

சென்னை, 23 ஜனவரி 2025: மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்கவிடுவது உயிர் இழப்பு போன்ற விபத்துக்களை ஏற்படுத்தும் என்பதால் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவின் பேரில் சென்னை யெருநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காற்றாடி மற்றும் மாஞ்சா நூல் தயாரிப்பது, விற்பனை செய்வது மற்றும் பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 19.01.2025 அன்று மதியம் கே-3 அமைந்தகரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்க விட்ட நபரால், அமைந்தகரை, என்.எஸ்.கே நகர், அண்ணா வளைவு மேம்பாலம் அருகே, கே-3 அமைந்தகரை காவல் நிலைய பெண் காவலர் ரம்யா இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, அவரது கழுத்தில் மாஞ்சா நூல் பட்டு காயம் ஏற்பட்டது. காயமடைந்த பெண் காவலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இது குறித்து கொடுத்த புகாரின் பேரில் கே-3 அமைந்தகரை காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கே-3 அமைந்தகரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து காற்றாடி பறக்க விட்ட நபரை தேடி விசாரணையில் கிடைத்த தகவலின் பேரில், அமைந்தகரை பகுதியில் மாஞ்சா நூல் தயாரித்து விற்பனை செய்த பஞ்சாட்சரம், வ/42, த/பெ.தங்கராஜ், பெரியார் காலனி, 1வது தெரு, பி.பி. கார்டன், அமைந்தகரை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 1 மாஞ்சா நூல் ரோல் பறிமுதல் செய்யப்பட்டது.



மேற்படி வழக்கில் காற்றாடி பறக்க விட்ட நபரை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட எதிரி பஞ்சாட்சரம் 21.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# சிவகங்கையில் மருது சகோதரர்களுக்கு ரூ.1 கோடியில் சிலைகள்: முதலமைச்சர் ஸ்டாலின் அடிக்கல்

சென்னை, 23 ஜனவரி 2025: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 22 ந் தேதி சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறுற்றது. அரசு விழாவில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் சிவகங்கையில் அமையப்பெறும் திருவுருவச் சிலைகளுக்கு அடிக்கல் நாட்டி, சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்துக்கு ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையினைத் திறந்து வைக்கிறார். வீரமங்கை வேலுநாச்சியாரின் படைத்தளபதியாக விளங்கிய வீரத்தாய் குயிலியின் நினைவைப் போற்றுகின்ற வகையில், ரூ.50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 9.10.2024 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார் என்பது நினைவிருக்கலாம்.

கவியரசர் முடியரசனுக்கு சிலை சிவகங்கை மாவட்டம் காளையார் கோயிலில் உள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவிடம் அருகில் ரூ.1 கோடியே 6 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் புதிய திருவுருவச் சிலைகளுக்காக நாளை சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டுகிறார்.

வீறு கவியரசர் முடியரசன் தேனி மாவட்டம் பெரியகுளம் சுப்பராயலு சீதாலட்சுமி ஆகியோருக்கு 1920- ம் ஆண்டு அக்டோபர் 7- ம் நாள் பிறந்தார். தனது இயற்பெயரான துரைராசுவை முடியரசன் என்று மாற்றிக் கொண்டவர். பெரியாரால் பகுத்தறிவுக் கவிஞன் முடியரசரன் என்றும், பேரறிஞர் அண்ணாவால் திராவிட நாட்டின் வானம்பாடி கவிஞர் முடியரசன் என்றும்.

கலைஞரால் திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் என்றும், இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிறது என்றால், அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம் என்றும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் வணங்கா முடியரசர் வளையா முடியரசர் என போற்றப்பட்ட வீறு கவியரசர் முடியரசனுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், காரைக்குடியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் திருவுருவச் சிலைக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டுகிறார்.

ஊமன்னர் மருது பாண்டியர்களின் உற்ற நண்பராக விளங்கிய சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் தென் தமிழ்நாட்டில் கி.பி.18 ம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டவர். அவர் பாகனேரி என்ற சிற்றூரின் தலைவராவார். அன்றைய காலகட்டத்தில் பாகனேரி என்பது 20க்கும் மேற்பட்ட சிற்றூர்களைக் கொண்ட ஒரு பகுதியாகும்.

தமிழர்களின் தொன்மையான போர்க்கலைகளில் குறிப்பாக ஈட்டி எறிதல் மற்றும் வளரி உள்ளிட்ட பல போர்க் கருவிகளைத் திறம்படக் கையாள்வதிலும் வல்லவர். மருதுபாண்டியர்களின் உற்ற நண்பராகவும் விளங்கியவர். வீரமங்கை வேலுநாச்சியாருடன் இணைந்து வெள்ளையர்களுக்கு எதிரான பல்வேறு போர்களைத் திறம்பட எதிர்கொண்டவர் என்று சிவகங்கை சரித்திர அம்மானையில் பக்கம் 151 ல் குறிப்பிடப்படுகிறது. நேரிடையாக இவரை வெல்ல முடியாத ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி முறையில் கத்தப்பட்டு என்கின்ற ஊரில் 1801 ம் ஆண்டு அக்டோபர் 21 ம் நாள் கொன்றனர்.

அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலத்தின் நினைவைப் போற்றி அவருக்குப் பெருமை சேர்க்கின்ற' வகையில்,

சிவகங்கை மாவட்டத்தில் அன்னாரின் வாரிசுகள் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய நகரம்பட்டியில் ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையினையும் முதலமைச்சர் திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார்.

# அரசியலமைப்பு சட்டவிதிகளை கேலிக்கூத்தாக்கி வருகிறார் தமிழக கவர்னர் : பாட்னாவில் நடந்த சபாநாயகர்கள் மாநாட்டில் அப்பாவு பேச்சு



சென்னை, 23 ஜனவரி 2025: தமிழக கவர்னர் அரசியலமைப்பு சட்டவிதிகளை கேலிக்கூத்தாக்கி வருகிறார் என்று பீகார் மாநிலத்தில் நடைபெற்ற மாநாட்டில் சபாநாயகர் அப்பாவு பேசினார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் அகில இந்திய சட்டமன்ற பேரவை தலைவர்கள் மாநாடு, அரசமைப்பு சட்டத்தின் 75-வது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் தமிழக சபாநாயகர் அப்பாவு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் சபாநாயகர் அப்பாவு பேசியதாவது :-

இந்தியாவின் ஒரு குக்கிராமத்தில் ஏழை, எளிய, விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75- வது ஆண்டு விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான குழு இந்திய அரசமைப்பை உருவாக்கியது. இந்தியாவின் வரலாற்று மற்றும் புவியியல் நிலைமைகளுக்கு ஏற்றவாறும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற குறிக்கோளுடன் எதிர்கால சூழ்நிலைகளைச் சமாளிக்கும் வகையிலும் இந்திய அரசமைப்பை வடிவமைத்தார்.

சுதந்திர இந்தியாவிற்கு பின் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் சமூக நீதிக்கான திருத்தமாகும். தமிழ்நாடு அந்த சமூக நீதிக்காகப் போராடி, அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற பெரும்முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத்தில் இடஒதுக்கீடு சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டு வந்து சமூக நீதியின் காவலராக தன்னை நிலைநிறுத்திக்கொண்டார் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு. தொடர்ந்து, பெரும்பாலான திருத்தங்கள் மக்கள் நலனுக்காகவே செய்யப்பட்டுள்ளன என்பது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும் என முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பொன்விழா கொண்டாட்டத்தில் பேசியபோது இதனை உறுதிப்படுத்தினார்.

இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளுக்கும் அரசமைப்புச் சட்டம் சமமான வாய்ப்பை வழங்கியிருந்தாலும், சமீபத்தில், நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்கள் இந்தியில் தலைப்புகளைக் கொண்டுள்ளன. அந்த மசோதாக்கள் இந்தியில் இருந்தால், அந்த மசோதாவில் உள்ள சாராம்சங்கள் இந்தி பேசாத மாநில மக்களை எப்படி சென்றடையும்?.

ஊாநில சுயாட்சி கேள்விக்குறியாகி விட்டது. கூட்டாட்சி தத்துவமும் நீர்த்துப் போய்விட்டது. மத்திய அரசு மாநில அரசுகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கும் போக்கு அதிகரித்து வருகிறது. மத்திய அரசு அதிகாரம் மற்றும் நிதிப்பங்கீட்டில் பாகுபாடு காட்டுவது மாநில அரசுகளுக்கு பெரும் தடையாக உள்ளது. சமீபகாலமாக, அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்படாத பல விஷயங்களில் கவர்னர்கள் தேவையில்லாமல் தலையிடும் போக்கு அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு கவர்னரின் செயல்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளன. தற்போதைய தமிழக கவர்னர் அரசியலமைப்புச் சட்டவிதிகளை கேலிக்கூத்து ஆக்கி வருகிறார்.

தமிழக மக்களையும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், நூற்றாண்டு பழமையான தமிழக சட்டமன்றத்தையும் கவர்னர் தொடர்ந்து அவமதித்து வருகிறார். தமிழகம் மட்டுமின்றி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் இதுபோன்றச் செயல்கள் கவர்னர்களால் அதிகளவில் நடைபெற்று வருவது வேதனையாக உள்ளது. கவர்னரின் அரசமைப்பு மீறல்களால், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தனது சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தவிப்பதை இந்த மதிப்புமிக்க கூட்டம் புரிந்துகொள்ளும் என்று நான் மனதார நம்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநிலத்துக்கு சுயாட்சி துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி பேசுகையில், 'மத்தியில் கூட்டாட்சி அமைத்தல், மாநிலங்களுடன் சுமூகமான உறவைக் கொண்டிருத்தல், நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்துதல், "வேற்றுமையில் ஒற்றுமை" என்பதன் வெற்றியையை உலகிற்குப் பறைசாற்றுவதற்கும் மாநிலத்திற்கு சுயாட்சி வழங்குவது குறித்து நாம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். என்றார்.

மாநாட்டில் சபாநாயகர் அப்பாவு, தமிழக கவர்னரின் செயல்பாடுகளை விமர்சித்து பேசியபோது, மாநிலங்களவைத் துணை சபாநாயகர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் எதிர்ப்பு தெரிவித்தார். கவர்னர் குறித்து சபாநாயகர் அப்பாவு பேசியது நிகழ்ச்சி குறிப்பேட்டில் பதிவாகாது என்று கூறினார்.

அதற்கு சபாநாயகர் அப்பாவு, 'தமிழக கவர்னர் அரசியல் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறார். இதுகுறித்து என்னால் இங்கு பேச முடியவில்லை என்றால், வேறு எங்கு பேசுவது" என்று கேள்வி எழுப்பினார்.

எனினும் கவர்னர் பற்றிய பேச்சு பதிவாகாது என்று மாநிலங்களவை துணை சபாநாயகர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் திட்டவட்டமாக கூறியதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சபாநாயகர் அப்பாவு மாநாட்டில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

# போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் கல்லூரி மாணவர்களுக்கான சிறப்புக் கண்காட்சி

சென்னை, 23 ஜனவரி 2025: சென்னை ஆவடியில் உள்ள போர் வாகனங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் அதன் பொன் விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கல்லூரி மாணவர்களுக்கான சிறப்பு கண்காட்சியை 2025 ஜனவரி 22 அன்று நடத்தியது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத் தொழில்நுட்பங்கள் குறித்து கல்லூரி மாணவர்கள் அறிந்துகொள்ளவும், அதன் தயாரிப்புகள் குறித்து தெரிந்துகொள்ளும் வகையிலும், இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய ராணுவத்தின் முன்கள தாக்குதல் வாகனமான அர்ஜூன் பீரங்கி உள்ளிட்ட போர் வாகனங்களின் பயன்பாடுகள் குறித்த செயல் விளக்கமும் கல்லூரி மாணவர்களுக்கு செய்துகாட்டப்பட்டது. 16 கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 920 மாணவர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.



# ஃபின்டெக் ஸ்டார்ட்அப்களை மேம்படுத்த ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டரை அறிமுகப்படுத்தும் யெஸ் வங்கி




சென்னை, 23 ஜனவரி 2025 : ரிசர்வ் வங்கி புதுமை மையம் (ஆர்பிஐஎச்) மற்றும் எஸ்.பி. ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (எஸ்பிஜெஐஎம்ஆர்) ஆகியவற்றுடன் இணைந்து யெஸ் வங்கியானது ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டர் திட்டத்தை (ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டர் புரோகிராம்) அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. தேசிய ஸ்டார்ட் அப் தினத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முயற்சியானது ஃபின்டெக் ஸ்டார்ட்அப்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதோடு, வணிக ரீதியான முக்கிய சவால்களை எதிர்கொள்ளுதல், கண்டுபிடிப்புகளை மதிப்பிடுதல் மற்றும் நிதி சார்ந்த தேவைகளுக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவின் ஸ்டார்ட் அப் தொழில்களானது செழித்து வளர்ந்து வருகிறது. குறிப்பாக, 1.5 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டிபிஐஐதி) பதிவுசெய்யப்பட்ட ஸ்டார்ட்அப்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட யூனிகார்ன்கள் காணப்படுகின்றன. இந்த வளர்ச்சியின் முக்கிய தூணான ஃபின்டெக், நிதி சேவைகளுக்கான அணுகலை மறுவரையறை செய்து சிறு வணிகங்கள் செழிக்க உதவுகிறது. இந்த ஆக்சிலரேட்டர் மூலம், ஒவ்வொரு துறையிலும் புதுமை மற்றும் ஒத்துழைப்புக்கான ஊக்கியாக யெஸ் வங்கி அதன் பங்கை வலுப்படுத்துகிறது.

உராய்வு இல்லாத நிதி ஆக்சிலரேட்டரின் முக்கிய அம்சங்கள், பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஆதரித்தல் : ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆர்பிஐஎச் இலிருந்து நிபுணத்துவம், எஸ்பிஜெஐஎம்ஆர் இலிருந்து கல்வி வளங்கள் மற்றும் யெஸ் வங்கியின் தொழில் அறிவு ஆகியவற்றைப் பெறும்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்துங்கள்: இந்த திட்டம் டிஜிட்டல் கடன், ஏஐ- இயங்கும் இடர் மேலாண்மை, பிளாக்செயின் அடிப்படையிலான பேமெண்டுகள் மற்றும் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றில் தீர்வுகளை ஆதரிக்கும்.

ஒழுங்குமுறை மற்றும் வணிக வழிகாட்டுதல்: யெஸ் கனெக்ட் போன்ற தளங்கள் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ஒழுங்குமுறை ஞாட்டமைப்புகளை வழிநடத்தவும், வணிக மாதிரிகளை மேம்படுத்தவும், டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பயன்படுத்தவும் கருவிகளை வழங்குகின்றன.

கூட்டு சுற்றுச்சூழல் அமைப்பு: இந்த திட்டம் வளர்ச்சி மற்றும் புதுமைகளை வளர்க்க நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களுக்கு இடையே கூட்டாண்மைகளை உருவாக்குகிறது.

யெஸ் வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பிரசாந்த் குமார் பேசுகையில் "உலகளவில் மூன்றாவது பெரிய ஸ்டார்ட்அப் நிறுவனங்களை அதிகமாகக் கொண்டுள்ள நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது, மேலும் ஃபின்டெக் ஸ்டார்ட்அப்கள் இந்த மாற்றத்தில் முன்னணியில் உள்ளன. உலகம் வேகமாக மாறி வருகிறது, எதிர்காலம் ஒன்றோடொன்று இணைந்த ஒன்றாகும். ஒரு காலத்தில் சாத்தியமற்றதாகத் தோன்றிய தொழில்நுட்பங்களால் இப்போது உலகமே இயக்கப்படுகிறது. யெஸ் வங்கியில், ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டர் போன்ற முன்முயற்சிகள் மூலம் இந்த வளர்ச்சியை ஆதரிக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இது ஸ்டார்ட்அப்கள் நிஜ உலக சவால்களை எதிர்கொள்ளவும் அளவிடக்கூடிய தீர்வுகளை உருவாக்கவும் உதவுகிறது." என்று கூறினார்.

புதுமைகளை இயக்குவதில் யெஸ் வங்கியின் பங்கு

யெஸ் ஹெட் ஸ்டார்ட்அப் போன்ற முயற்சிகள் மற்றும் ஐஆர்எஸ் பிஸ், யெஸ் கனெக்ட் மற்றும் ஸ்மார்ட்ஃபின் போன்ற டிஜிட்டல் தளங்கள் மூலம் யெஸ் வங்கியானது தொடர்ந்து ஸ்டார்ட்அப்களை, குறிப்பாக நிதி தொழில்நுட்பத்தில், ஆதரித்து வருகிறது. இந்த தீர்வுகள் செயல்பாடுகளை எளிதாக்குகின்றன, இதனால் ஸ்டார்ட்அப்கள் புதுமைகளில் கவனம் செலுத்த முடிகிறது.

யுபிஐ-யில் கிரெடிட் லைனைத் தொடங்குவதற்காக வெகாபே உடனான சமீபத்திய ஒத்துழைப்பு போன்ற வங்கியின் கூட்டாண்மைகள், ஸ்டார்ட்அப்களின் தேவைகளுக்கு ஏற்ப நிதி தீர்வுகளை இணைந்து உருவாக்குவதில் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இதேபோல், ஷிறியிமிவிஸி - இன் வைஸ் டெக் ஸ்கூல் ஆஃப் இன்னோவேஷன் உடனான அதன் தொடர்பு, ஸ்டார்ட்அப்களுக்கு வழிகாட்டுதல், நிதி அணுகல் மற்றும் திறமையாக அளவிடுவதற்கான வளங்களை வழங்குகிறது.

"ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் செழித்து வளரக்கூடிய ஒரு வலுவான சூழல் அமைப்பை உருவாக்குவதில் எங்கள் கவனம் உள்ளது. தயாரிப்புகள் அல்லது தளங்களை மட்டும் வழங்குவதில்லை; உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் கூட்டாண்மைகளையும் நாங்கள் வழங்குகிறோம்," என்று திரு. குமார் மேலும் கூறினார்.

எஸ்.பி. ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் டீன் டாக்டர் வருண் நாகராஜ், "முதலில் ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டரை தொடங்க ஆர்பிஐஎச் மற்றும் யெஸ் வங்கி வழங்கிய ஆதரவை நாங்கள் பாராட்டுகிறோம். எஸ்பிஜெஐஎம்ஆர் இல், எங்கள் வைஸ் டெக் முன்முயற்சியின் மூலம், அதிநவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய தன்மை மற்றும் நெறிமுறைகளுடன் கலக்கும் பொறுப்பான கண்டுபிடிப்புகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த கூட்டாண்மை ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சவால்களை எதிர்கொள்ளவும், நிதி தேவைக்கான வாய்ப்புகளை மறுவரையறை செய்யவும், இந்தியாவின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் உதவும். நாங்கள் ஒன்றாக, ஒரு தடையற்ற மற்றும் பாதுகாப்பான நிதி கலாச்சாரத்தை உருவாக்கி வருகிறோம்." என்றார்.

ரிசர்வ் வங்கி புதுமை மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ராஜேஷ் பன்சால் தனது தொலைநோக்குப் பார்வையைப் பகிர்ந்து கொண்டார். "ஒரு பில்லியன் இந்தியர்களுக்கு ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸை" செயல்படுத்தும் எங்கள் நோக்கம் புதுமை மற்றும் தொழில்முனைவோரை வளர்ப்பதில் ஆழமாக வேரூன்றியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த வழிகாட்டுதலை அணுகுவதன் மூலமும், வங்கிகளுடன் தொடர்புகளை எளிதாக்குவதன் மூலமும், இந்தியாவின் நிதி சுற்றுச்சூழல் அமைப்பின் எதிர்காலத்தை வடிவமைக்கும் மாற்றத்தக்க வளர்ச்சிக்கான பாதைகளை உருவாக்க அவர்களுக்கு உதவுவதன் மூலம் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கு இந்த ஆல்சலரேட்டர் திட்டம் ஒரு சான்றாகும்."

இந்த திட்டத்தின் தொடக்கமானது மிகப்பெரிய வாய்ப்புகள் மற்றும் மாற்றத்திற்கான ஒரு காலகட்டத்துடன் ஒத்துப்போகிறது. 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய துணிகர மூலதன முதலீடுகள் $314 பில்லியனாக உயர்ந்து, 2030 ஆம் ஆண்டில் உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரம் $20 டிரில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுவதால், நிதி தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள் நிதியத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கத் தயாராக உள்ளன. ஃபிரிக்ஷன்லெஸ் ஃபைனான்ஸ் ஆக்சிலரேட்டர் என்பது கூட்டாண்மைகளின் உருமாறும் சக்தி, துணிச்சலான தொலைநோக்கு மற்றும் இடைவிடாத செயல்பாட்டைக் குறிக்கும் ஒரு இயக்கமாகும்.